**Minutes of the Public Hearing conducted for the proposed project of the River Sand Quarry to be formed by the Executive Engineer, PWD/WRO, Mines & Monitoring Division, Tanjore over an extent of 20.00.0 Hectares in SF.No. 782/1 (Part) Mathirivellur Village, Sirkazhi Taluk, Mayiladuthurai District held on 07.01.2021 at 10.30 A.M at White Palace Thirumana Mahal, Sirkazhi Taluk, Mayiladuthurai District.**

**PRESIDING:**

| | | |
|---|---|---|
| 1. | Tmt.R.Lalitha., IAS., | : District Collector,<br>Mayiladuthurai District. |
| 2. | Thiru.R.Venkatesan., M.E., | : District Environmental Engineer (a/c),<br>Tamil Nadu Pollution Control Board,<br>Nagapattinam. |

**PROJECT REPRESENTATIVES**

| | | |
|---|---|---|
| 1. | Thiru. R. Elangovan., B.E., | : Executive Engineer,<br>PWD/WRO, Mines & Monitoring Division,<br>Tanjore. |

**Totally 49 persons have participated including Government Officers, Project Proponent and general public (Enclosure vide Annexure - A).**

The District Environmental Engineer (i/c), Tamilnadu Pollution Control Board, Nagapatinam District has welcomed the District Collector, Mayiladuthurai, Executive Engineer, PWD/WRO, Mines & Monitoring Division, Tanjore, Public and Press for the Public Hearing Meeting.

He has informed that as per Ministry of Environmental & Forest, New Delhi vide EIA Notification dated 14.09.2006 for certain type of projects public opinion has to be obtained before the issue of Environment Clearance. This public hearing is conducted for the project of the proposed River Sand Quarry to be formed by the Executive Engineer, PWD/WRO, Mines & Monitoring Division, Tanjore over an extent of 20.00.0 Hectares in SF.No. 782/1 (Part) Mathirivellur Village, Sirkazhi Taluk, Mayiladuthurai District. He also informed that the views/comments and suggestions of public on the project will be recorded and it will be forwarded to State Environment Impact Assessment Authority, Chennai after getting approval from the District Collector.

District Environmental Engineer has informed that after the presentation by Thiru.Dr.A.Dhamodharan, Managing Director, EIA Consultant, M/s. Eco Tech Labs Pvt

Ltd., Chennai on behalf of Executive Engineer, PWD/WRO, Mines & Monitoring Division, Tanjore, the public can clarify their doubts and give their opinion and seek clarification about the project.

The District Collector, Mayiladuthurai explained the importance of public hearing to the formation of river sand quarry. She briefed about the area details of the river sand quarry and illegal sand mining. To avoid such situation, government itself undertake sand mining activities with proper environmental management plan. Finally, the District Collector invited the public to express their views/comments and suggestions either in writing or oral one by one after the project details were explained by the EIA Consultant.

Thiru.Dr.A.Dhamodharan, Managing Director, EIA Consultant, M/s. Eco Tech Labs Pvt Ltd., Chennai made the presentation on behalf of Executive Engineer, PWD/WRO, Mines & Monitoring Division, Tanjore about the proposed River Sand Quarry project.

The Public participated in the public hearing gave their views/comments and suggestions about the project which are as follows.

**1.Thiru.S.Sekar, ADMK District Representative, Palluran Padugai Village.**

He said that in the Mathirivellur, Elathur and Vadarangam Panchayat, river sand is accumulated at about 40 feet height. Hence, he requested to remove the sand and protect this place from flood and to revamp the river bank. He also requested to give priority to the local tractors 2 times in a week to take sand.

**2.Thiru.Muthazhagan, President , Tractor Association, Mayiladuthurai.**

He requested that during operation of the quarry, six load of sand shall be instead of giving one load to each tractor then only public and poor people get benefits so as to supply the sand in a low cost instead of M Sand.

**3.Thiru.R.Sekar, President , Lorry Association, Mayiladuthurai.**

He requested to supply the sand which gets from this district to this district people itself so as to avoid the usage of M Sand and P Sand.

**4.Thiru.Devendhiran, Mathirivellur Panchayat union member.**

He said that in the riverside of Mathirivellur Panchayat, sand is deposited at about huge feet, because of this river water is directly discharged into sea and get wasted. He also asked to operate the quarry one year or two years frequently to recharge the rainwater in the river.

**5.Thiru.Saravanan, Agaraelathur Panchayat**

He asked to place display board which contains details of the quarry. He appreciates the online system. He asked to provide separate quarry for lorry and tractors. He also asked to provide speed breakers on the road and requested to operate the quarry without any damage to publics.

**6.Thiru.Ramkumar, Thoppu Street, Mathirivellur Panchayat**

He said that people in this surrounding are not able to construct home because of lack of sand and no quarry in this area. He requested to operate Mathirivellur sand quarry immediately.

District Collector, Mayiladuthurai conclude with her remarks and added that the opinions/ comments and suggestions of the public were video recorded and minutes of this public hearing will be sent to State Level Environmental Impact Assessment Authority (SEIAA), Chennai through Tamil Nadu Pollution Control Board and this project will be implemental soon after getting clearance from the concerned authorities.

Finally, the District Environmental Engineer (a/c), Tamilnadu Pollution Control Board, Nagapattinam, thanked all who attended the Public hearing meeting. With this, the public hearing meeting come to an end.

**Encl.:** 1. Attendance sheet for the participants.
2. Video (CD) of the Public Hearing.
3. Copy of Petitions.

27/1/2021

**District Environmental Engineer (a/c),**
**Tamilnadu Pollution Control Board,**
**Nagapattinam.**

27/1/21

**District Collector,**
**Mayiladuthurai District,**
**Mayiladuthurai.**

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டம், மாதிரிவேலூர் கிராமம், புல எண்:782/1 (பகுதி), 20.00.0 ஹெக்டேர் பரப்பளவில் பொதுப்பணித்துறை / நீர் வளத்துறை, சுரங்கம் மற்றும் கண்காணிப்பு கோட்டம், தஞ்சாவூர் மூலம் ஆற்று மணல் குவாரி அமைத்திட மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழியில் அமைந்துள்ள ஒயிட் பேலஸ் திருமண மஹாலில் 07.01.2021 அன்று காலை 10.30 மணிக்கு நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புரை கூட்டத்தின் நடவடிக்கை குறிப்புகள்:

முன்னிலை :

1. திருமதி.இரா.லலிதா., இ.ஆ.ப., : மாவட்ட ஆட்சித்தலைவர்,
மயிலாடுதுறை மாவட்டம்,
மயிலாடுதுறை.

2. திரு.இரா.வெங்கடேசன்., எம்.இ., : மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (கூ/பொ),
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
நாகப்பட்டினம் மாவட்டம்.

திட்டத்தின் சார்பாக கலந்து கொண்டவர்கள்:

1. திரு. R.இளங்கோவன்., பி.இ., : செயற் பொறியாளர்,
பொதுப்பணித்துறை / நீர் வளத்துறை, சுரங்கம் மற்றும் கண்காணிப்பு கோட்டம், தஞ்சாவூர்

கருத்து கேட்புக் கூட்டத்தில் அரசு அலுவலர்கள், நிறுவனத்தினர் மற்றும் பொதுமக்கள் உட்பட 49 நபர்கள் கலந்து கொண்டார்கள் (இணைப்பு – A).

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், நாகப்பட்டினம் அவர்கள் மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டம், மாதிரிவேலூர் கிராமம், புல எண்:782/1 (பகுதி), 20.00.0 ஹெக்டேர் பரப்பளவில், பொதுப்பணித்துறை / நீர் வளத்துறை, சுரங்கம் மற்றும் கண்காணிப்பு கோட்டம், தஞ்சாவூர் மூலம் ஆற்று மணல் குவாரி அமைத்திட பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டத்திற்கு வருகை தந்த மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை / நீர் வளத்துறை, சுரங்கம் மற்றும் கண்காணிப்பு கோட்டம், தஞ்சாவூர், அரசு அலுவலர்கள், பொது மக்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பத்திரிக்கையாளர்கள் ஆகியோரை வரவேற்றார். மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம், புது தில்லி, 14.09.2006 அன்று வெளியிட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிப்பின் படி சுற்றுச்சூழல் அனுமதி வழங்குமுன் பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் அவசியமானது என்பதால் மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டம், மாதிரிவேலூர் கிராமம், புல எண்:782/1 (பகுதி), 20.00.0 ஹெக்டேர் பரப்பளவில் பொதுப்பணித்துறை / நீர் வளத்துறை, சுரங்கம் மற்றும் கண்காணிப்பு கோட்டம், தஞ்சாவூர் மூலம் ஆற்று மணல் குவாரி அமைத்திட பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் நடைபெறுவதாகவும், நிறுவனத்தின் பிரதிநிதிகள் இந்த உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டத்தை பற்றி விவரித்த பின் பொதுமக்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் ஒப்புதலுடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம், சென்னைக்கு அனுப்பி வைக்கப்படும் என கூறினார்.

மாவட்ட ஆட்சியர், மயிலாடுதுறை அவர்கள் ஆற்று மணல் குவாரி அமைப்பது குறித்த இந்த பொது மக்கள் கருத்து கேட்புக் கூட்டத்தின் முக்கியத்துவம், ஆற்று மணல் குவாரி அமைய உள்ள இடங்களின் விபரங்கள் குறித்து அவர் விளக்கினார். மேலும், சட்டவிரோத மணல் சுரங்கங்கள் குறித்தும், இத்தகைய சூழ்நிலையைத் தவிர்ப்பதற்காக முறையான சுற்றுச்சுழல் மேலாண்மை திட்டத்துடன் மணல் சுரங்க நடவடிக்கைகளை அரசாங்கமே மேற்கொள்கிறது என்றும் கூறினார். இறுதியாக மாவட்ட ஆட்சியர் அவர்கள் பொதுமக்களிடம் தங்கள் கருத்துக்களை திட்ட ஆலோசகர் அவர்களின் பட விளக்க காட்சியுடன் கூடிய திட்ட அறிக்கையை விளக்கி கூறிய பின்னர் தாங்கள் கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து பொதுப்பணித்துறை / நீர் வளத்துறை, சுரங்கம் மற்றும் கண்காணிப்பு கோட்டம், தஞ்சாவூர் சார்பாக முனைவர் A. தாமோதரன் நிர்வாக இயக்குநர், திட்ட ஆலோசகர், தி/ள் எக்கோ டெக் லேப்ஸ் பிரைவேட் லிமிட், சென்னை அவர்கள் மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டம், மாதிரிவேலூர் கிராமம், புல எண்:782/1 (பகுதி), 20.00.0 ஹெக்டேர் பரப்பளவில் ஆற்று மணல் குவாரி அமைப்பது தொடர்பான பட விளக்க காட்சியுடன் கூடிய திட்ட அறிக்கையை விளக்கி கூறினார்.

**பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்கள் தெரிவித்த கருத்துக்கள்:**

1.திரு.S. சேகர் அ.தி.மு.க மாவட்ட பிரதிநிதி. பாலூரான் படுகை கிராமம்.

மாதிரிவேலூர், எலத்தூர் மற்றும் வடரங்கம் ஊராட்சி ஆற்று பகுதியில் 40 அடி உயரத்திற்க மணல் இருக்கிறது. அதை அப்புறப்படுத்தினால் தான் இப்பகுதி வெள்ளப் அபாயத்திலிருந்து காப்பாற்றப்படும். மேலும், இப்பகுதியில் ஆற்றுக்கரையை பலப்படுத்த உடனடியாக மணல் குவாரியை தொடங்க வேண்டும் என்று தெரிவித்தார். மேலும் வெளி மாவட்ட/ மாநிலத்திற்கு முன்னுரிமை தராமல் உள்ளூர் டிராக்டர்களுக்கு முன்னுரிமை கொடுத்து வாரத்திற்கு இரண்டு நடை மணல் அல்ல வழிவகை செய்ய வேண்டும் தெரிவித்தார்.

2.திரு.முத்தழகன்.டிராக்டர் சங்க தலைவர், மயிலாடுதுறை.

மணல் குவாரி இயங்கும் போது வர்த்தக டிராக்டர்களுக்கு வாரத்திற்கு ஒரு லோடு மணல் வழங்குவதை 5 முதல் 6 லோடு மணல் கொடுத்தால், ஏழை மக்கள் அனைவரும் பயன்பெறுவார்கள. மேலும், ஒற்றை வீடு கட்டும் பொதுமக்களுக்கு குறைந்த விலையில் எம்-சேண்ட அளவிற்கு மணல் வழங்க முடியும் என்று தெரிவித்தார்.

3.திரு. R. சேகர். மணல் லாரி சங்க தலைவர், மயிலாடுதுறை.

இந்த மாவட்டத்தில் எடுக்கப்படும் மணல்களை இந்த மாவட்ட மக்களுக்கே பயன்படும் வகையில் வழங்க வேண்டும் எனவும் அப்படி வழங்கினால் எம்-சேண்ட், பி-சேண்ட் தேவையில்லை என்றும் தெரிவித்தார். மேலும் கன்னியாகுமரி முதல் காஷ்மீர் முதல் இந்த மாவட்ட மணல் எடுத்து செல்ல படுவதாலும் அவற்றை இந்த மாவட்ட பயனாளாருக்களுக்கே வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

4.திரு.தேவேந்திரன், ஊராட்சி ஒன்றிய உறுப்பினர், மாதிரிவேலூர் கிராமம்.

அனைக்கரை முதல் காட்டூர் வரை புதிய தடுப்பணைகள் 4 அடி வரை கட்டப்படுவதாகவும், ஆனால் ஆற்றில் 10 அடி முதல் மணல் உள்ளதாகவும் இதனால் மழை நீரை சேகரிக்க முடியாமல் கடலில் சென்று வீனாகிறது என்று தெரிவித்தார். ஆகவே 1 ஆண்டு மற்றும் 2 ஆண்டுகள் முறையே மணல் குவாரிகள் இயக்கப்பட்டால் ஆற்று நீர் சேகரிப்படும் என்றும். ஆகவே மணல்குவாரியை இந்த ஆண்டு திறக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

5.திரு.சரவணன், பனங்காட்டான் கிராமம், அகர எலத்தூர் ஊராட்சி.

மணல் குவாரி பற்றிய விபரங்களை பொது மக்களுக்கு தெரிவிக்க வேண்டும் என்றும், ஆன்லைனில் பதிவு செய்து மணல் எடுப்பது நல்ல முறை என்றும், லாரி மற்றும் டிராக்டர்களுக்கு தனியாக மணல் குவாரி அமைத்தால் நன்றாக இருக்கும் என்றும் தெரிவித்தார். மேலும் மணல் எடுத்து செல்லும் சாலைகளில் வேகத்தடைகள் அமைத்து பொது மக்களக்கு எந்த பாதிப்பும் ஏற்படாமல் குவாரி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

6.திரு. ராம்குமார்,தோப்பு தெரு, மாதிரிவேலூர் ஊராட்சி.

மாதிரிவேலூர் ஊராட்சி பகுதியில் மணல் குவாரி இல்லாததால் மணல் மேடு உருவாகி உள்ளதாகவும், மணல் கிடைக்காததால் இப்பகுதி மக்கள் வீடு கட்ட முடியாமல் உள்ளதாகவும் தெரிவித்தார். ஆகவே மாதிரிவேலூர் மணல் குவாரி உடனே அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மாவட்ட ஆட்சியர், மயிலாடுதுறை அவர்கள் இக்கருத்து கருத்து கேட்புரை கூட்டத்தில் தெரிவித்த பொது மக்களின் கருத்துகள் அனைத்தும் காணொளியாகவும், எழுத்து வடிவிலும் பதிவு செய்யப்பட்டு அதனை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம், சென்னைக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவித்தார். மேலும் துறைவாரியான அனுமதி பெற்ற பின்னர் இத்திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும் எனவும் கூறினார்.

நிறைவாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்(கூ/பொ), தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், நாகப்பட்டினம் அவர்கள் பொது மக்கள் கருத்து கேட்புரை கூட்டத்திற்கு வந்திருந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.அத்துடன் பொதுமக்கள் கருத்து கேட்புரை கூட்டம் முடிவுற்றது.

**இணைப்பு:**

1. கருத்துக் கேட்புக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் வருகை பதிவேடு (A).
2. கருத்துக் கேட்புக் கூட்ட நடவடிக்கையை பதிவு செய்யப்பட்ட குறுந்தகடுகள்.
3. நேரடியாக பெறப்பட்ட மனுக்கள்.

27/1/21

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்(கூ/பொ)
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்
நாகப்பட்டினம்

27/1/21.

மாவட்ட ஆட்சித்தலைவர்
மயிலாடுதுறை மாவட்டம்
மயிலாடுதுறை